அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 197 /2016
தேதி : 31.12.2016

**இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...**

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்
நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வாழ்த்து.

2016 ஆம் ஆண்டில் சோதனைகளையும், சாதனைகளாக்கி, 2017 ஆம் புதிய ஆண்டில் அடியெடுத்துவைக்கும் இந்த நேரத்தில் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில்நுட்பம், விஞ்ஞானம் உள்ளிட்ட பலதுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, வருடந்தோறும் இவ்வுலகம் முன்னேறுவது போல், மிக முக்கிய அடிப்படைத் தேவையான விவசாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து முன்னேற்ற வேண்டும்.

பொறாமை, வஞ்சகம், சூது போன்ற தீமைகளை விடுத்து, அன்பு, சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றை நிலைநாட்ட, புதிய வருடத்தில் **"மாற்றத்தை நோக்கி"** புதுமையான வரலாறு படைக்க உறுதியேற்போம்.

இந்த புதிய வருடத்தில் அனைத்து தமிழர்களுக்கும் புத்தாண்டு பரிசாக "ஜல்லிக்கட்டை நடத்த அனுமதி" வழங்கவேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக்கொள்கிறேன்.

புத்தாண்டு தினத்தில் அனைவரும் எல்லா வளங்களையும், நலன்களையும் பெற்று நல்வாழ்வு வாழ்வதற்கு இறைவனை வேண்டி, அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜாதி, மத, மொழி, இன, பேதமற்ற புதிய சமத்துவ சமுதாயத்தை உருவாக்க பாடுபடுவோம்.

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்